# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 123/ந/2018**

**நாள் : 03/08/2018**

திரு J. ஜெபசிங் டானியல்,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
குழித்துறை நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – **எதிர் மனுதாரர்**

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அஞ்சல், சிங்கிள் ஜேயர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு J. ஜெபசிங் டானியல் அவர்களின் 05.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 123/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மனுதாரர் சார்பாக அவரது தந்தையார் அளித்த வாக்கு மூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அஞ்சல், சிங்கிள் ஜேயர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு J. ஜெபசிங் டானியல் என்பவர், தான் புதிதாகக் கட்டிய வீட்டிற்கு வரிவிதிப்பு செய்யக்கோரி 20.12.2017 அன்று குழித்துறை நகராட்சியில் மனுச் செய்ததாகவும், பல நாட்கள் நகராட்சி ஆணையரிடம் முறையிட்டும் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்த நாள்வரை வரி விதிப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து வரி விதிக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து 11.01.2018 அன்று நகராட்சி வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு, மேற்படி கட்டடம் அளவீடு செய்யப்பட்டது என்றும், அதனடிப்படையில் கணினி மூலம் வரிவிதிப்பு செய்து சிறப்பு அறிவிப்பு (Special Notice) வழங்கப்பட்டுள்ளது என்றும் தனது 04.07.2018

நாளிட்ட அறிக்கையில் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் கட்டடத்திற்கு 140/015/00986 என்ற எண்ணில் சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட்டு, அக்கட்டடத்திற்கு 28/65/2A, Block 28 ( 1 to 87) – Emilan என்ற முகவரி வழங்கப்பட்டுள்ளதாக 149/0000386 எண்ணிட்ட சிறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. முறையீட்டு மனுதாரர் சார்பாக அவரது தந்தையாரிடம் 01.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது மகனுக்கு சொந்தமான கட்டடம் சம்பந்தமாக வழங்கப்பட்ட அறிவிப்பு எண்.149/0000386–இல் கதவு எண்.28–65/2A என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றும், இதே கதவு எண்.28–65/2A திரு J . விஜயகுமார் என்பவரின் வீட்டிற்கு வழங்கப்பட்ட சொத்து வரி மதிப்பீட்டெண் 149/015/00903–லும் குறிப்பிடப்பட்டுள்ளது என விசாரணையின்போது தெரிவித்தார். எனவே, தனது மகனின் வீட்டிற்கு வேறு புதிய கதவு இலக்கம் வழங்கப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

விசாரணையின்போது தாக்கல் செய்த சிறப்பு அறிக்கை மற்றும் திரு J . விஜயகுமார் வீட்டிற்கான சொத்துவரி இரசீது ஆகியவை கூர்ந்து நோக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கும், திரு J விஜயகுமார் வீட்டிற்கும் வெவ்வேறான சொத்து வரி மதிப்பீடு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், மேற்குறிப்பிட்ட இரண்டு நபர்களின் வீட்டிற்கும் ஒரே கதவு எண்.28–65/2 A குறிக்கப்பட்டுள்ளன. எனவே, முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு வேறு கதவு எண் வழங்கப்பட்டு, கணினியில் உரிய பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழித்துறை நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 3– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16.8.18

20/8/18

பெறுநர்

1. திரு J. ஜெபசிங் டானியல்,
சிங்கிள் டேயர் தெரு,
மார்த்தாண்டம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
குழித்துறை நகராட்சி,
மார்த்தாண்டம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி